




• 4 பக்கங்கள் • விலை ரூ. 5

# தினதமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936








www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 04.07.2026 • மலர் 04 • இதழ்: 185 • சனிக்கிழமை • Edition : Nagercoil • 04.07.2026 • Vol : 04 • Issue : 185 • Page : 4 • Rs. 5/-


## இந்தியா - ஜப்பான் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து:

# ரூ.35,000 கோடியில் கார் தொழிற்சாலை

புதுடெல்லி, ஜூலை4

ஹரியானா மாநிலம் கார்கோடாவில்ரூ.35,000 கோடி முதலீட்டில் புதிய கார் தொழிற்சாலையை பிரதமர் மோடியும், ஜப்பான்பிரதமர்சனேடகாய்ச்சியும் நேற்று தொடங்கி வைத்தனர். பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பாக இரு நாடுகள் இடையே பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.


இந்தியா ஜப்பான் வருடாந்திர மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. இதில் பங்கேற்க ஜப்பான் பிரதமர் சனேடகாய்ச்சி 3 நாள் அரசு முறைப்பயணமாகநேற்று டெல்லிக்கு வந்தார். குடியரசுத் தலைவர் மாளிகையில் அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர்டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியும், ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சியும் அதிகாரப்பூர்வமாக சந்தித்துப் பேசினர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தனர். அவர்கள் கூறியதாவது:

பிரதமர் மோடி: இந்தியாவின் ஆட்டோமொபைல், மின்னணு துறை வளர்ச்சிக்கு ஜப்பான் முக்கிய பங்களிப்புகளை வழங்கி உள்ளது. தற்போது ஏஐ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றி வருகின்றன. பாதுகாப்பு தொடர்பாக முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இது தவிர, மருந்து உற்பத்தி, மருத்துவ உபகரணங்கள், உயிரி தொழில்நுட்பம், நிதிச் சேவை தொடர்பாகவும் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

இந்தியாஜப்பான்பயோ காஸ் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் புதிதாக 1,000 பயோ காஸ், இயற்கை உரத் தொழிற்சாலைகள் கட்டப்படும். இதன் மூலம் இந்திய கிராமங்கள் வளர்ச்சி அடையும். இந்தியாவில் கச்சா எண்ணெய் கையிருப்பை அதிகரிக்கத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை வழங்க ஜப்பான் முன் வந்துள்ளது. பேட்டரி, பசுமை ஹைட்ரஜன், அணுசக்தி, கப்பல் கட்டுமானம், விமான போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகள் இணைந்து பணியாற்றும்.

ஜப்பான் பிரதமர் டகாய்ச்சி: இந்தியாவின் பெட்ரோலிய கையிருப்பைஅதிகரிக்கதேவையானதொழில்நுட்பஉதவிகளைஜப்பான்வழங்கும். எரிசக்தி, அரியவகை கனிமங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயல்படும். ஜப்பான் இந்திய கடற்படைகள் இணைந்து விரைவில் போர்ப் பயிற்சிகளில் ஈடுபடும். இரு நாடுகளும் இணைந்து ஆயுதங்களை உற்பத்தி செய்யும். இவ்வாறு அவர்கள் பேசினர்.

இரு நாடுகள் இடையே கையெழுத்தான பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி, 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின்கீழ் போர்க் கப்பல்களுக்கு தேவையான சிறப்பு ஆன்டெனாக்கள் தயாரிக்கப்பட உள்ளன. இதன் மூலம் எதிரிகளின் ரேடார்களால் இந்திய, ஜப்பானிய போர்க் கப்பல்களை கண்டுபிடிக்க முடியாது. வரும் காலத்தில் இணைந்து போர்க்கப்பல்கள் தயாரிக்கவும் கொள்கைரீதியில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.



ஹரியானாவின்கார்கோடாவில் ரூ.35,000 கோடி முதலீட்டில் மாருதி சுசூகி நிறுவனத்தின் கார் உற்பத்தி தொழிற்சாலை கட்டப்பட்டுள்ளது. டெல்லியில் நேற்று மாலை நடைபெற்ற இந்திய ஜப்பான் கூட்டுறவு பொருளாதார மன்றக்கூட்டத்தின் போது பிரதமர் மோடியும், ஜப்பான் பிரதமர் சனே டகாய்ச்சியும் இணைந்து காணொலி வாயிலாக இந்த புதியகார் தொழிற்சாலையை தொடங்கி வைத்தனர். சுமார்800ஏக்கரில்அமைந்துள்ள இந்த ஆலை உலகின் மிகப்பெரிய கார் தொழிற்சாலைகளில் ஒன்றாகும். முதல்கட்டமாக, இங்கு ஆண்டுக்கு 5 லட்சம் கார்கள் உற்பத்தி செய்யப்படும்.

பின்னர் படிப்படியாக இது 10 லட்சம் வரை அதிகரிக்கப்பட உள்ளது. பொருளாதார மன்றக் கூட்டத்தில் சனே டகாய்ச்சி பேசியபோது, ''மும்பை அகமதாபாத் இடையே2027ல் புல்லட் ரயில் சேவையைதொடங்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு தேவையான உதவிகளை ஜப்பான் வழங்கும். இந்த வழித்தடத்தில் ஜப்பானின் அடுத்த தலைமுறை புல்லட் ரயிலான இ10 ஷிங்கன்சென் அறிமுகம் செய்யப்படும்'' என்றார். இந்தபுல்லட் ரயில்கள் மணிக்கு 320 முதல் 400 கி.மீ. வேகத்தில் செல்லும். இதன்மூலம் மும்பையில் இருந்து 2 மணி நேரத்தில் அகமதாபாத் செல்ல முடியும்.

டெல்லியில் இந்தியா ஜப்பான் கூட்டு பொருளாதார மன்றக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசும் போது, ''ஜப்பானின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை சனே டகாய்ச்சி பெற்றுள்ளார். அவர் எனது அழகிய இளம் தங்கை. அவர் ஜப்பானின் நாரா பகுதியை சேர்ந்தவர். இந்த பகுதி இந்தியா ஜப்பான் இடையிலான புத்தமதப் பாரம்பரியத்தின் மையமாக விளங்குகிறது'' என்றார்.

இதைத் தொடர்ந்து பேசிய சனே டகாய்ச்சி, ''பிரதமர் மோடி, என்னை தங்கை என்று அழைத்து உறவு பாராட்டினார். அவர் எனது அண்ணன். நாங்கள் இருவரும் அண்ணன், தங்கையாக செயல்படுவோம்'' என்று தெரிவித்தார்.

உள்ளூர் கரன்சியில் வணிகம்: இந்தியாவும், ஜப்பானும் தற்போது டாலரில் வணிகம் மேற்கொள்கின்றன. இதற்கு மாற்றாக, இந்திய ரூபாய் மற்றும் ஜப்பானின் யென் கரன்சியில் வணிகம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு உள்ளது. இதன் மூலம் இரு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் நேரம், பணம் மிச்சமாகும். இதுதொடர்பாக கடந்த ஆண்டிலேயே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது இந்த திட்டத்தை முழுமையாக அமல்படுத்த தீவிரம் காட்டப்படுகிறது.

## எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் எழுதிய இடது குரல் வெளியீட்டு விழாவும், சாகித் அகாடமி விருதுக்கான பாராட்டு விழா



தஞ்சாவூர்ஜூலை 4

எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் எழுதிய இடது குரல் நூல் வெளி யீட்டு விழாவும் 2025 சாகித் அகாடமி விருது பெற்றதற்க்கான பாராட்டு விழாவும் தஞ்சாவூர் பெசன்ட் லாட்ஜில் நடைபெற்றது

நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் முருக சரவணன் தலைமை வகித்தார் .மாநில குழு உறுப்பினர் கள் விஜயகுமார் சைதா பாலா மாவட்ட பொருளாளர் அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மாவட்ட செயலாளர் சத்திய நாதன் அனைவரையும் வரவேற் றார் .தொடக்க உரையாக மாநில பொது செயலாளர் எழுத்தாளர் களப்பிரன். நூலை இந்திய கம்யூ னிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வீரபாண்டியன் இடது குரல் நூலை வெளியிட்டார் .முதல் நூலிலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ( மார்க் சிஸ்ட்)மாநில செயற்குழு உறுப்பி னர் கனகராஜ் பெற்றுக்கொண்டார்

தமிழ்ச்செல்வன் எழுதிய நூல் களான திருப்பி அடித்த வரலாறு அறிமுகத்தினை மேனாள் முதல்வர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி டாக்டர் மருதுதுரையும் ,தமிழ் சிறுகதையில் 50 ஆண்டு கால தடயங்கள் என்ற நூலை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில செயற்குழு உறுப்பினர் எழுத்தாளர் அகிலா கிருஷ்ணமூர்த்தி நூலை அறிமுகப்படுத்தி பேசினார்கள்

வாழ்த்துரையாக தஞ்சாவூர் மக்களவை உறுப்பினர் முரசொலி, பாரதி கல்வி குழுமம் செயலாளர் புனித கணேசன், பாம்பே ஸ்விஸ் சுப்பிரம ணிய சர்மா, வெற்றி தமிழர் பேர வை செழியன், மாநில செயற்குழு வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்து ரை வழங்கினார்கள் ஏற்புரையாக எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் பேசினார்

நிறைவாக மாநகர செயலாளர் ஸ்ரீதர் நன்றி கூறினர்

## கிருஷ்ணகிரி அருகே

## கிராமத்திற்கு செல்லும் பொதுப்பாதையை அடைத்த நபர்கள்!காவல் துறையினர் நடவடிக்கை!



கிருஷ்ணகிரி ஜூலை 4:

கிருஷ்ணகிரி அருகே உள்ள கும்மனூர் கிராமம் அருகே உள்ளது சின்னராகிமானப்பள்ளி. இங்கு 30க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த பகுதியில் சுமார் 30 ஆண்டுகளாக பொது வழி பிரச்சனைஇருந்துவருவதையொட்டிஅதேகிராமத்தை சேர்ந்த ராஜாமணி தரப்பினர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, வழக்கு தீர்ப்பின்படி, வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் ஆக்கிரமிப்புகளை அளந்து எல்லை நிர்ணயம் செய்தனர், ஆனால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை, இந்த நிலையில் எதிர் தரப்பினர் நேற்று மாலை கிராமத்திற்கு செல்லும் பொதுவழியை ஏர் உழுது, கற்கள் குவித்து கிராம மக்கள், கிராமத்திற்கு செல்ல முடியாதவாறு தடுத்தனர். இது குறித்து காவல்துறையினர் மற்றும் வருவாய் துறை அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் பொது வழி பாதையை சேதப்படுத்தியநபர்கள்மீதுநடவடிக்கைஎடுக்கப்படும் என தெரிவித்து, சாலையில் ஏற்படுத்திய தடுப்பு கற்களை அகற்றினர். மேலும் பொதுமக்களுக்கு இடையூறு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்தரப்பினரை எச்சரித்தனர். இந்நிலையில் இன்று கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து இரு தரப்பினரின் சமாதான செய்து, தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பொதுவழி அமைத்து தருவதாக உறுதி அளித்தார்.

இதைத் தொடர்ந்து அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இதுகுறித்து அதே கிராமத்தை சேர்ந்த கர்ப்பிணி பெண் ஒருவர் கூறுகையில், எதிர்த்தரப்பினர் வேண்டுமென்றே பிரச்சனை செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தில் பொது வழி பாதையில் கற்களை கொட்டி தடங்கலை ஏற்படுத்தினர், இதனால் இன்றைக்கு எங்கள் கிராமத்தில் இருந்து பள்ளி, கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள் யாரும் பள்ளி கல்லூரிக்கு செல்லவில்லை. தமிழ்நாடு அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் எங்கள் கிராமத்திற்கு பொது வழி பாதையை ஏற்படுத்தி தர வேண்டும் என வேதனைடன் தெரிவித்தார்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட விஷு மகாஜன், தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குரச்சந்திரன் மற்றும் துறைசார்ந்த அரசு அதிகாரிகள் ஆகியோர்கள் உள்ளார்.





## தஞ்சாவூர் மாவட்ட பூதலூர் ஒன்றியத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை பார்வையிட்டு, மாவட்ட கலெக்டர் ரேவதி ஆய்வு

தஞ்சாவூர் ஜூலை 4

தஞ்சாவூர் மாவட்ட பூதலூர் ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணி களை பார்வையிட்டு கலெக்டர் ரேவதி ஆய்வு செய்தார்

செங்கிப்பட்டி ஊரக வளர்ச்சி மற் றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தப்பட்ட விபிஜி ராம்ஜி திட்டத்தை தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டார் மேலும் சிப்காட் வளாகத்தில் சேமித்துவைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை பார்வையிட்டு அவ்வப்போது பெய்து வரும் மழையிலிருந்து நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்கவும், மழை நீர் எளிதாக வெளியேறும் வகையில் வழிகள் அமைப்புகளை மேம்படுத்திடவும், அறிவுறுத்தினார் .பின்னர் செங்கி ப்பட்டி ஆதி திராவிட நல தொடக்க ப்பள்ளியில் மாணவர்களிடையே உரையாற்றினார் இதைத்தொடர்ந்து செங்கிப்பட்டி கால்நடை மருந்தகம் மற்றும் மகாத்மா காந்தி நெஞ்சக மருத்துவ மனை உள்ளிட்டவைகளை ஆய்வு மேற்கொண்டு, அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேற் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார. மேலும் புதிய நியாய விலை கடைகளில் கட்டு மான பணி ,உயர்மட்ட நீர் தேக்க தொட்டி கட்டு மான பணி உள்ளிட்ட பணிகளை ஆய்வு செய்தார்

ஆய்வின் போது உதவி கலெக்டர் (பயிற்சி) சுபாஷ் கார்த் திக் ,ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகணேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்


தினதமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701


### பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி

## சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் அரை நிர்வாண போராட்டம்

தஞ்சாவூர். ஜூலை. 4

தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத் தில் நடைபெற்ற விவசாயிகள் கருத்து கேட்புக் கூட்டத்தில் பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் மற்றும் இரண்டு மூதாட்டிகள் உள்பட சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் கருத்து கேட்பு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்து அரை நிர்வாண போராட்ட த்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டம் அமைச்சர்கள் வினோத் மற்றும் ஷாஜகான் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பம் முதலே அதிருப்தியில் இருந்த விவசாயி கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். பின்பு பயிர் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும். குருவை மற்றும் சம்பா சாகுபடி பொய்த்து விட்ட நிலையில் ஏக்கருக்கு ரூபாய் 15 ஆயிரம் வழங்க வேண்டும். மேக தாதுவில் அணை கட்டுவதை மத்திய மாநில அரசு தடுத்து நிறுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயி அய்யாகண்ணு தலைமையில் மூதாட்டிகள் இரண்டு பேர்கள் உள்பட 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் அரை நிர்வாண போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது

# சுசீந்திரம் பெரியகுளத்தில் விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் தொடர்பாக ஆணையர் ஆய்வு



நாகர்கோவில், ஜூலை. 4

குமரி மாவட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து பல இனப் பறவைகள் உணவு தேடியும், இனப்பெருக்கத்திற்கும் வருவது வழக்கம். இதனால் தேரூர், மாணிக்கம் புத்தேரி, சுசீந்திரம், வேம்பனூர் உள்ளிட்ட பல குளங்கள் பறவைகள் சரணாலயமாக வனத்துறை அறிவித்து பாதுகாத்து வருகிறது. இந்தக் குளங்களுக்கு கூட்டம் கூட்டமாக பறவைகள் வந்து கூடு கட்டி, குஞ்சு பொரித்து செல்வதை பார்க்க முடிகிறது.

நாகர்கோவில் மையப் பகுதியில் உள்ள சுசீந்திரம் பெரிய குளத்தில் பறவைகள் அமரும் வகையில் குளத்து நடுவே பெரிய திட்டுடன் மரங்கள் வளர்ந்து இருப்பது சிறப்பாக உள்ளது.

நாகர்கோவில் மாநகராட்சி நிர்வாகம் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் வந்து அமர்ந்து இந்த பறவைகளை மற்றும் இயற்கையை ரசித்து பார்க்கும் வகையில் சுசீந்திரம் பதினெட்டாம் படி பகுதியில் கண்காணிப்பு கோபுரம் மற்றும் இருக்கை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அலங்கார நடைபாதையும் போடப்பட்டுள்ளது.

இதனால் வெளியூர்களில் இருந்து சுற்றுலா வரும் மக்கள் இந்த பகுதியில் அமர்ந்து இளைப்பாறி விட்டு அழகை ரசித்து செல்வது வழக்கம்.

இந்த நிலையில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா நேற்று சுசீந்திரம் பெரிய குளத்தில் திடீரென ஆய்வு மேற்கொண்டார். ஏற்கனவே அங்கு காட்சி கோபுரம் அமைத்தது இருப்பது போல் மற்றொரு காட்சி கோபுரம் அமைக்கலாமா? என எனவும், அலங்கார நடைபாதை நீட்டிப்பு செய்ய வழி வகை உள்ளதா? எனவும் அவர் ஆய்வு செய்தார்.

இதனைத் தவிர சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகள் அனைத்தும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்று சுசீந்திரம் பெரிய குளத்தின் மறுப்பகுதியில் உள்ள கரியமாணிக்கபுரத்திலும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் ராஜா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நாகர்கோவிலில் போலி நகையை கொடுத்து ரூ 10 லட்சம் மோசடி; 3பேருக்கு வலை

நாகர்கோவில், ஜூலை. 4

நாகர்கோவில் பங்களா சாலை பகுதி சேர்ந்தவர் பெருமாள். வியாபாரி. இவருக்கு மூன்று நபர்கள் அறிமுகமானார்கள். அவர்களுடன் பெருமாள் இயல்பாக பழகி வந்திருக்கிறார். அப்போது அவர்களில் ஒருவர் தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்றும், அவருடையஅவசரசிகிச்சைக்காகதனதுமுத்துமாலையை பெற்றுக் கொண்டு பணம் தருமாறு கேட்டுள்ளார்.

அப்போது அவர்கள் கொண்டு வந்த அந்த நகையை நகைகடைக்குகொண்டுசென்றுபெருமாள்பரிசோதித்தார். அதில் இருந்த இரண்டு முத்துக்களும் தங்க முத்துக்கள் என தர உறுதி செய்யப்பட்டது. அந்த சங்கிலி 200 கிராம் எடை கொண்டது என்றும் அதற்கு பதிலாக 10 லட்சம் ரூபாய் தருமாறு அவர்கள் கேட்டனர்.

இதை அடுத்து அவரிடம் இருந்து முத்துமாலையை பெருமாள் வாங்கிக் கொண்டார். அதற்கு பதிலாக தனக்கு தெரிந்த பலரிடம் கடன் வாங்கி 10 லட்ச ரூபாயை அந்த நபர்களிடம் கொடுத்திருக்கிறார். முத்துமாலையை விற்று வாங்கிய கடனை அடைத்து விடலாம் என்று பெருமான் நினைத்துள்ளார். அதன்படி அந்த சங்கிலியை விற்பனை செய்ய கொண்டு சென்றார். அப்போது அந்த முத்துமாலை போலியானது என்பது தெரிய வந்தது.

தான்ஏமாற்றப்பட்டதை உணர்ந்தபெருமாள்தன்னிடம் பணம் வாங்கிய நபர்களிடம் கேட்டுள்ளார். ஆனால் அவர்கள் சரியாக பதிலளிக்கவில்லை. எனவே போலி முத்துமாலை கொடுத்து ரூ. 10 லட்சம் மோசடி செய்த மூன்று பேர் மீதும் வடசேரி போலீஸ் நிலையத்தில் பெருமாள் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து, சம்பந்தப்பட்ட 3 நபர்கள் யார்? எனஅடையாளம்காணும்முயற்சியில்தீவிரமாகஈடுபட்டு வருகின்றனர்.

## தருமபுரி குமாரசாமிப்பேட்டையில்

# துர்க்கை அம்மன் கோவில் தேரோட்டம் ஏராளமான பெண்கள் பங்கேற்பு



தருமபுரி, ஜூலை.04

தருமபுரி குமாரசாமிப்பேட்டையில் துர்க்கையம்மன் கோவில் லட்சார்ச்சனை விழாவையொட்டி தேரோட்டம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தருமபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வளாகத்தில் உள்ள ஸ்ரீ துர்க்கையம்மன் கோவிலில் ஆண்டு தோறும் ஆனி மாதம் லட்சார்ச்சனை தேர்த்திருவிழா 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்தாண்டு துர்க்கையம்மன் கோவில் 35 வது ஆண்டு லட்சார்ச்சனை தேர்த்திருவிழா கடந்த 25ம் தேதி தொடங்கியது. விழாவையொட்டி மாரியம்மன் கோவில் அருகில் இருந்து மேள தாளங்கள் முழங்க பால்குட ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக கோவிலை வந்தடைந்த உடன் துர்க்கையம்மனுக்கு சிறப்பு பால் அபிஷேகம், வழிபாடுகள் மற்றும் உபகார பூஜைகள் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்கார சேவையும், மகாதீபாரதனையும் நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். விழாவையொட்டி பக்தர்களுக்குசிறப்புபிரசாதம்வழங்கப்பட்டது.

இந்த விழாவையொட்டி தொடர்ந்து 7 நாட்கள் தினமும் காலை, மாலை, இரவு 3 காலங்களிலும் துர்க்கையம்மனுக்கு லட்சார்ச்சனை, சிறப்பு அபிஷேக ஆராதனை, அலங்கார சேவை மற்றும் மகாதீபாராதனை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து துர்க்கையம்மனுக்கு பூர்த்தி ஹோமம், 108 சங்காபிஷேகம் மற்றும் காசி கங்கை தீர்த்தத்தால் சிறப்பு அபிஷேக ஆராதனையும், வழிபாடும் நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக துர்க்கையம்மன் தேரோட்டம் நடைபெற்றது. காலையில் பெண்கள் மட்டும் வடம் பிடித்து தேரோட்டத்தை துவக்கி வைத்தனர். இதைத்தொடர்ந்து மாலையில் மின்விளக்கு அலங்காரத்தில் பொதுமக்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். இதைத் தொடர்ந்து பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதங்கள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது . இறுதி நிகழ்வாக அம்மனுக்கு ஊஞ்சல் சேவை நடைபெறுகிறது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை துர்க்கை அம்மன் விழா குழுவினர் மற்றும் செங்குந்தர் சமூகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# சிறுசேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் அஞ்சல் முகவர்களுக்கான சிறப்பு போட்டி; 15ம் தேதி வரை நடக்கிறது

நாகர்கோவில், ஜூலை. 4

இந்திய அஞ்சல் துறையின் கன்னியாகுமரி கோட்டம் சார்பில் சிறுசேமிப்புத் திட்டங்களில் புதிய கணக்குகள் தொடங்குவதை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு அஞ்சல் சிறப்பு போட்டிகளை ஜூலை 1 முதல் ஜூலை 15 வரை நடத்துகிறது.

இப்போட்டியில், ஒவ்வொரு அஞ்சல் சேமிப்பு முகவரும் வைப்பு நிதி, சேமிப்பு உள்ளிட்ட 100 புதிய கணக்குகளை தொடங்கும் இலக்குடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்த ப்பட்டுள்ளது.

100 புதிய கணக்குகளைத் தொடங்கும் அனைத்து முகவர்களுக்கும் கன்னியாகுமரி அஞ்சல் கோட்டத்தின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும், அதிக எண்ணிக்கையிலான புதிய கணக்குகளைத் தொடங்கி முன்னிலை வகிக்கும் முதல் மூன்று முகவர்களுக்கு சிறப்பு பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த போட்டி மூலம் பொதுமக்களிடம் அஞ்சல் துறையின்சிறுசேமிப்புத்திட்டங்கள்குறித்துவிழிப்புணர்வு ஏற்படுத்தி, சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதுடன், முகவர்களின்பங்களிப்பைகௌரவிப்பதேநோக்கமாகும்.

இதுகுறித்து கன்னியாகுமரி கோட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அனைத்து தலைமை மற்றும் துணை அஞ்சலக அலுவலர்களும் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள முகவர்களை முழுமையாக ஊக்குவித்து, போட்டியை வெற்றிகரமாக நடத்திட ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், பொதுமக்கள் அஞ்சல் சேமிப்புத் திட்டங்களில் அதிகளவில் இணைந்து பயன்பெறுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக "பெண்குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்கான பெண்குழந்தை நலத்தூதர் விழிப்புணர்வு கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்.இரா.சக்தி சுபாஷினி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு திட்ட அலுவலர் .சக்திகாவியா,மாவட்டதொடக்ககல்விஅலுவலர்.சௌந்தர்ராஜன்மற்றும்மாணவியர்கள் உள்ளனர்.

# தமிழகத்தில் காவிரி டெல்டா பாலைவனம் ஆகும் 28 மாவட்ட மக்கள் காவிரி நீரை தான் நம்பி உள்ளனர்

## திருப்பூரில் அன்புமணி ராமதாஸ் பேட்டி



திருப்பூர், ஜூலை 4

அன்புமணி ராமதாஸ் தலைமையில் மேகதாது அணை தடுப்போம் காவிரி காப்போம் என்கிற தலைப்பில் விழிப்புணர்வு பரப்புரை நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக 3வது நாள்திருப்பூரில் விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ள வந்துள்ள டாக்டர் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது.

கர்நாடகாவில் காவிரி குறுக்கே மேகதாது அணை கட்டக்கூடாது என 4 நாள் நடைபயணம் 3 வது நாள் இன்று . தமிழகத்தில் காவிரி டெல்டா பாலைவனம் ஆகும். 5.50 கோடி மக்கள் 28 மாவட்ட மக்கள் காவிரி நீரை தான் நம்பி உள்ளனர். மதுரையில் வைகை வந்தாலும் அத்தனை மாவட்டங்களும் காவிரி நீரைத் தான் அருந்தி வருகின்றனர் . ஒவ்வொரு முறையும் கர்நாடக மாநிலத்தில் அவர்களுக்கு தேவையானதை செய்து கொள்கிறார்கள்.

ஒரு முறை கூட கர்நாடகா அரசு ஒப்பந்தத்தை செயல்படுத்தியது கிடையாது. மேகதாது கட்டும் முன்பே தண்ணீர் தராத நிலையில் மேகதாது கட்டப்பட்டால் குடிக்க கூட தண்ணீர் கிடைக்காது. அனைவரும் பாதிப்படையும் பிரச்சினை என்பதால் பொதுமக்கள் இளைஞர்கள் வந்து அழுத்தம் கொடுத்தால் தான் மாநில அரசு கவனம் கொள்கிறது .மத்திய அரசு கவனம் செலுத்தும் மத்திய அரசு கர்நாடகாவிற்கு தான் சாதகமாக வருவார்கள். அதே போல் கர்நாடகாவில் 2028 ல் தேர்தல் வர உள்ளதால் அடுத்த ஒன்றரை ஆண்டு சிவக்குமார் இன்னும் அதிகமாக சத்தம் போடுவார். அங்கு அனைத்து கட்சிகளும் கூடிய பேசி வருகிறார்கள். எவ்வளவு பெரிய பிரச்சினை வந்தாலும் இங்கு அது போல நடக்காது. வனத்தை அழித்தால் தான் இந்த அணையை கட்ட முடியும். சமூக ஆர்வலர்கள் இதனை எதிர்க்கிறார்கள்.

சட்டமன்றத்தில் மேகதாது நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற சட்ட மன்ற தீர்மானம் திருத்தம் கொண்டு வந்தது ஏற்புடையது அல்ல.அணைகட்டவே எதிர்ப்பு தீர்மானத்தில் மேகதாது நடுவர் தீர்மானம் என்பது முரணானது.

இது 100 சதவீதம் பாசனத்திற்கு தான். மேகதாது நடுவர் மன்றம் அமைத்தால் கர்நாடகாவிற்கு சாதகமான முறையில் தான் அமையும். எனவே இந்த தீர்மானத்தை திரும்பப்பெற வேண்டும். எதற்கும் வழி விடக்கூடாது. இதனை பயன்படுத்தி கர்நாடகா மேகதாது நடுவர் ஆணையம் அமைத்தால் நமக்கு தான் பாதிப்பு,

தமிழ்நாட்டின் உயிர்நாடி பிரச்சினை. அனைத்து கட்சி கூட்டத்தை தமிழ்நாடு அரசு கூட்டி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். நிபுணத்துவ வழக்கறிஞர்களை வைத்து வழக்கு தொடர வேண்டும். காடுகளை வளர்ப்பதற்கு விரிவு படுத்த இந்தியா கையெழுத்திட்டுள்ளது. அதற்கு எதிரானது இந்த அணை கட்டுவது அதனை கொண்டு வழக்கு தொடரலாம் . 2033 வரை இங்கு வரக்கூடாது . அதுவரை 175 டி.எம்.சி தண்ணீர் பகிர்வு உத்தரவு அமலில் உள்ளது. ஆனால் இந்த மேகதாது அணை பிரச்சனையை தேர்தலுக்காக கொண்டு வருகிறார்கள். தமிழ்நாடு அரசு இதனை தேர்தல் பிரச்சினையாக பார்க்க கூடாது. காவிரி ஆணைய உத்தரவுப்படி தமிழக அனுமதி இல்லாமல் டிபிஆர் கூட தயார் செய்யக் கூடாது ஆனால் இப்போது அனைத்தும் நடக்கிறது. இது முரணான குழப்பமான சூழ்நிலை உள்ளது.

1974ல் கர்நாடகாவில் காவிரி பாசன 6.8 லட்சம் ஏக்கர், 1991 ல் 12 லஞ்சமாக உயர்ந்துள்ளது 2016ல் 21 லட்சமாக உயர்ந்துள்ளது. 1974 ல் தமிழ்நாட்டில் 29 லட்சம் ஏக்கர். 20 லட்சமாக குறைந்துள்ளது. மேகதாது கட்டப்பட்டால் தமிழ்நாட்டில் 10 லட்சம் ஏக்கராக குறையும். 60 விழுக்காடு உணவு காவிரிப் படுகையில் தான் விளைகிறதுஎன தெரிவித்தார்..

## அருமனை அருகே

# அரசு பணியின் போது கிராம நிர்வாக அலுவலக பணியாளர் மீது தாக்குதல்



மார்த்தாண்டம், ஜூலை.4

குமரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும்நுகர்வோர்பாதுகாப்புத்துறை,அந்தியோதயா அன்னை யோஜனா திட்டத்தின் கீழ் உள்ள 59 ஆயிரத்து 441 பயனாளிகளின் குடும்ப அட்டைகளை 100% தணிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என பணியாளர்களை நியமித்து கலெக்டர் பிரதாப் உத்தரவு பிறப்பித்திருந்தார். மேற்படி தணிக்கை பணிக்காக நேற்று முன்தினம் இடைக்கோடு கிராம நிர்வாக அலுவலகத்தில் உதவி பணியாளராக பணியாற்றி வரும் ரெஜி சேகர் (44) மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ்குமார் ஆகியோர் வீடு வீடாக சென்று குடும்ப அட்டை பயனாளர்களை சந்தித்து தணிக்கை பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அரத்தங்கோடு என்ற பகுதியில் வசிக்கும் சதி குமாரி என்ற பெண்ணின் வீட்டிற்கு சென்றபோது அவரை வெளியே நின்று அழைத்துள்ளனர். அப்போது அங்கு வந்த அதே பகுதியை சேர்ந்த ஜான் பால் (45) என்பவர் எனது உறவினரை ஏன் பெயர் சொல்லி அழைக்கிறீர்கள் என கேட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளரைதகாதவார்த்தைகளால்திட்டி உள்ளார். அப்போது 2 பேரும் அங்கு இருந்து வேறு வீடுகளுக்கு சென்றுள்ளனர். அப்போது அங்குள்ள ஒரு தனியார் பள்ளி அருகே வழிமறித்து ஜான்பால் 2 பேரிடம் தகராறு செய்துள்ளார். பின்னர் ரெஜி சேகரை பைக்கால் மோதி ஓடையில் தள்ளி, தாக்கியுள்ளார். கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ்குமாரை தகாத வார்த்தையில் திட்டிவிட்டு, தப்பி ஓடி உள்ளார்.

இதில் காயமடைந்த ரெஜி சேகர் குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். இது குறித்த புகாரின் பேரில் பளு கல் போலீசார் ஜான் பால் மீது வழக்கு பதிவு செய்து அவரை தேடி வருகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பாக, மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி மாவட்ட வருவாய் அலுவலர் பொ .ஷேக் அயூப், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் .சக்தி காவியா, உதவி ஆட்சியர் பயிற்சி .சாய்சைதன்யா ஜாதவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# குமரி கடற்கரைகளில் தாது மணல் எடுப்பதால் கதிர்வீச்சு குறைகிறது; ஐ ஆர் இ எல் தலைவர் தகவல்



குளச்சல், ஜூலை. 4

மணவாளக்குறிச்சியில் இயங்கி வரும் மத்திய அரசு நிறுவனமான ஐ ஆர் இ எல் நிறுவனம் தனது சமூகப் பொறுப்புகளின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக புதுக்கடை அருகே இனயம் புத்தன்துறை ஊராட்சிக்கு உட்பட்ட ஹெலன் நகரில் செயல்பட்டு வரும் சாந்திதான் பெண்கள் இயக்கம் மகளிர் மேம்பாட்டுக்காக ஐ ஆர் இ எல் நிறுவனம் ரூ. 16.25 லட்சம் செலவில் தையல் பயிற்சி கட்டிடம் அமைத்து, 10 மின் தையல் இயந்திரங்களை வழங்கியது. இதன் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. தையல் பயிற்சி கட்டிடத்தை ஹெலன் நகர் பங்கு பணியாளர் ஜான் போஸ்கோ திறந்துவைத்தார்.ஐ ஆர்இ எல்முதன்மை பொது மேலாளர் மற்றும் தலைவர் செல்வராஜன் மின் தையல் இயந்திரங்களை வழங்கினார். பின்னர் அவர் பேசியதாவது:

குமரி மாவட்ட கடற்கரை பகுதிகளில் மோனசைட் என் 9 கனிமம் இயற்கையாகவே உள்ளதால் கதிர்வீச்சு அதிகம் உள்ளது. இந்த தாதுமண்ணை ஐ ஆர் இ எல் நிறுவனம் எடுப்பதால் 8 முதல் 10 மடங்கு வரைகதிர்வீச்சு குறைகிறது. இதனால் சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் ஆரோக்கியம் மேம்படுகிறது. நிலையான அபிவிருத்தி மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு உகந்த முறையில் கனிமங்கள் அடங்கிய தாது மண் எடுக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்படுகிறது. அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள பகுதிகளில் நில உரிமையாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மண்ணை எடுத்துவிட்டு, அங்கு கனிமங்கள் நீக்கிய மண்ணை குத்தகை தொகையுடன் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களிடமே 11 மாதங்களுக்குள் நிலம் திரும்ப ஒப்படைக்கப்படுகிறது. என கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் ஹெலன் நகர் பங்கு பேரவை துணைத் தலைவர் அந்தோணி தாசன், பொருளாளர் ஜெனிதா, செயலாளர் விஜயன் மற்றும் பொறுப்பாளர்கள், ஐ ஆர் ஏ நிறுவன பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# 14 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்: ஹோட்டல்களுக்கு அபராதம் விதிப்பு: நாகர்கோவில் மாநகராட்சி நடவடிக்கை

நார்கோவில், ஜூலை 04

நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகளில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக்குகளை பறிமுதல் செய்ய மாநகராட்சி ஆணையர் ஐஸ்வர்யா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் பெயரில் நேற்று காலை மாநகராட்சிக்கு உட்பட்ட கோட்டாறு மற்றும் பறக்கை பகுதிகளில் உள்ள கடைகளில் சோதனை நடைபெற்றது. இந்த சோதனையின் போது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகள் மற்றும் உணவு பொதியும் பிளாஸ்டிக் ஷீட்டுகள் என சுமார் 14 கிலோ எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது மாநகராட்சி கிழக்கு மண்டல சுகாதார அலுவலர் ஸ்டான்லி குமார், ஆய்வாளர் ரேஷ்மா, கண்ணன் மகாராஜா மற்றும் மேற்பார்வையாளர்கள், தூய்மை இந்தியா திட்ட அனிமேட்டர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட

# மேலூர் ரயில்வே ஸ்டேஷன் பகுதியில் சட்டவிரோதமாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 3 நபர்கள் கைது



தூத்துக்குடி , ஜுலை 4

தூத்துக்குடி வடபாகம் காவல் நிலைய ஆய்வாளர் வேல்ராஜ் வழக்கு பதிவு செய்து சட்டவிரோத கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட தூத்துக்குடி போல்பேட்டை பகுதியைச் சேர்ந்த மகேஷ் குமார் மகன் மாரிபிரபாகரன் (26), கந்தசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகன் முத்து மணிகண்டன் (30) மற்றும் முகமது சதாலிபுரம் பகுதியைச்சேர்ந்த முருகன் மகன் சக்தி ஆனந்த் (31) ஆகிய 3 பேர்களை கைது செய்து அவர்களிடமிருந்து 6 கிலோ 100 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தார்.

# மர்மமான முறையில் ஆட்டோ டிரைவர் இறப்பு; பொன்மலை போலீசார் விசாரணை



திருச்சி, ஜூலை 4

திருச்சி பொன்மலை மஞ்சள்திடல் ரயில் நிலையம் அருகே உள்ள மைதானத்தில் அம்பிகா புரத்தைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் ரவி என்பவர்தனது ஆட்டோ அருகிலேயே உயிரிழந்த நிலையில் கிடந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அப்பகுதியினர் போலீசாருக்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொன்மலை போலீசார், உயிரிழந்தவர் ராமச்சந்திரன் எனும் ரவி என்பதும்,

அவருக்கு மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் இருப்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

மேலும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சில ஆண்டுகளாக தனது குடும்பத்தாரை விட்டு தனியாக வசித்து வந்த அவர், மதுப் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ரயில் பயணத்தின் போது தடுமாறி விழுந்ததில் தனது இரண்டு கால்களையும் இழந்துள்ளார். இருந்த போதும் கட்டைக்கால் பொருத்திக்கொண்டு சொந்தமாக ஆட்டோ ஓட்டி வந்த ரவி, கிடைக்கும் நேரங்களில், கிடைத்த வருவாயில் மது அருந்தி ஆட்டோவிலும் சாலை ஓரத்தில் கிடைக்கும் இடத்திலும் படுத்து உறங்கி தனது வாழ்க்கையை ஓட்டி வந்துள்ளார். மேலும் அவரது கால்கள் இழந்த வழக்கில் சொற்ப தொகை நீதிமன்றம் மூலம் கிடைக்கப்பெற்று இருக்கிறது. அதை தெரிந்தவர்களுக்கு வட்டிக்கு கொடுத்து பணம் பார்த்திருக்கிறார்.

இந்த நிலையில் நேற்று இரவு மது அருந்திய ரவி மஞ்சள் திடல் ரயில் நிலையம் பின்புறம் தனது ஆட்டோ அருகிலேயே இறந்த நிலையில் இன்று காலை கண்டறியப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அப்பகுதியினர் கொடுத்த தகவலின் அடிப்படையில், பொன்மலை போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

உயிரிழப்பிற்கான காரணம் குறித்து பொன்மலை போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# ஆசிப் பிரியாணி பெருங்குடி கேசி ஃபுட் ஸ்ட்ரீட் ல் பிரம்மாண்ட திறப்பு விழா

சென்னை, ஜூலை 4

சென்னை, ஆசிப் பிரியாணி பெருங்குடி, கந்தன்சாவடி, வெங்கடேஸ்வரா காலனி, எம்ஜிஆர் மெயின் ரோட்டில் உள்ள கேசி புட் ஸ்ட்ரீட் ல் மிகப் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது. ஜூலை 3 மற்றும் 4ஆம் தேதி முதல் ஒரு சிக்கன் பிரியாணி வாங்கினால், ஒரு சிக்கன் பிரியாணி இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் கிளைகள்போரூர்பெரமண்ட்1ஐடிபார்க்லும், வேளச்சேரி கிராண்ட் மாலிலும், கோயம்பேடு பஸ் நிலையம் எதிரிலும் இன்னும் பல இடங்களில் சிறப்பான நிறுவனங்களாக விளங்கி வருகிறது. ஆசிப் பிரியாணி அறுசுவைநிறைந்தசிக்கன்மற்றும்மட்டன்பிரியாணிகளை தயார்செய்து பொதுமக்களுக்குவழங்குவதில்தலைசிறந்த நிறுவனமாக திகழ்ந்து வருகிறது.

# நெல்லையில் கைதி தப்பியோட்டம்; 2 போலீசார் பணியிடை நீக்கம்

திருநெல்வேலி, ஜூலை 4

நெல்லையில்கைதி ஒருவர்தப்பியோடியது தொடர்பாக 2 போலீசாரை மாவட்ட எஸ்.பி. அதிரடியாக பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மாவட்டம், ராஜவல்லிபுரத்தைச்சேர்ந்த ஆறுமுகக்கனி (வயது 22) என்ற கைதியை கோர்ட்டில் ஆஜர்படுத்திய பின், பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்க போலீசார் அழைத்துச் சென்றனர். சிறை வாசல் அருகே அவர் திடீரென தப்பியோடினார்.

டிரோன் மூலம் தேடியும் அவர் சிக்கவில்லை. இதையடுத்து கைதியை தேட 4 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே கைதியை தப்பவிட்டதாகக் கூறி, போலீஸ் ஏட்டுகள் மல்லி கைராஜ் மற்றும் பார்வதி ஆகிய 2 பேரை பணி இடைநீக்கம் செய்து திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. விஸ்வேஷ் பா.சாஸ்திரி அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.



தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கே. வேட்ரப்பட்டி கிராமத்தில் தேசிய கால்நடை அபிவிருத்தி திட்டம் (NLMEDP) கீழ் 50% அரசு மானியம் பெற்று அமைத்துள்ள செம்மறி ஆடுகள் வளர்க்கும் நவீன தொழில்நுட்ப பண்ணையினை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் சென்று பார்வையிட்டு ஆடுகள் பராமரிக்கப்பட்டு வரும் முறை குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது அரூர் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் மருத்துவர்கனகசபை உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

## தருமபுரி அடுத்த கோடியூர் கிராமத்தில்

# அருள்மிகு ஸ்ரீ கோடி மாரியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா



தருமபுரி ஜூலை 04

தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டை அடுத்த கோடியூர் கிராமத்தில் ஸ்ரீ மகா கணபதி, ஆதித்யாதி நவகிரகங்கள், ஸ்ரீ கருடாழ்வார் ஆஞ்சநேயர், ஸ்ரீதேவி பூதேவி சமேத சௌந்தரராஜ பெருமாள், அருள்மிகு ஸ்ரீ கோடி மாரியம்மன்கோயில் உள்ளது.

இக்கோயில் கும்பாபிஷேக விழா திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஜூன்.20ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் விழா துவங்கியது. இதை தொடர்ந்து தீர்த்தக்குடம் மற்றும் முளைப்பாரி ஊர்வலம் நடந்தது. பின்னர் கணபதி பூஜை, லட்சுமி பூஜை, சரஸ்வதி பூஜை மற்றும் யாகசாலை பூஜைகள், வாஸ்து பூஜை உட்பட பல் வேறு பூஜைகள், வழிபாடுகள் நடைபெற்றது. தொடர்ந்து மூலவர் தெய்வங்கள் பிரதிஷ்டை செய்து, அஷ்டபந்தனம் சாற்றும் நிகழ்ச்சி நடந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக யாக சாலையில் இருந்து மேளதாளங்கள் முழங்க, தீர்த்தகுடங்கள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. பின்னர் காலை 10.45 மணிக்குமேல் 11.45 மணிக்குள் அருள்மிகு ஸ்ரீ கோடி மாரியம்மன் உள்ளிட்ட கோயில் விமான கோபுர கலசங்கள் மற்றும் மூலவர், பாரிவார தெய்வங்களுக்கு புனிதநீர் ஊற்றப்பட்டு, கும்பாபிஷேக விழா வெகுவிமர்சியாகநடந்தது. தொடர்ந்து மூலவருக்கு சிறப்பு அபிஷேக, அலங்காரம் மற்றும் மகா தீபாரதனை நடந்தது. இதில் கோடியூர், அதியமான் கோட்டை, தேங்காய்மரத்துப்பட்டி, எர்ரப்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் மற்றும் ஊர் பொது மக்கள் செய்திருந்தனர்.

# கோவை கொடிசியாவில் அக்ரி இன்டெக்ஸ் 2026 கண்காட்சி



கோவை ஜூலை:04

கோவை ஒசூர் சாலையில் உள்ள கொடிசியா அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இச்சந்திப்பில் கொடிசியா அக்ரி இன்டெக்ஸ் கண்காட்சியானது. தற்போதைய இந்திய வேளாண்மைத் துறை சார்ந்து நடைபெறும் ஒரு மாபெரும் கண்காட்சியாகும். இந்த கண்காட்சி வேளாண்மை, தோட்டக்கலை, பால் பண்ணை தொழில், கோழி வளர்ப்பு மற்றும் உணவுப்பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்த நவீன மேம்பாடுகளை காட்சிப்படுத்துகின்ற ஒரு தளமாக விளங்குகிறது. இந்த துறைசார்ந்த அறிவுப் பரிமாற்றம் தொழில்நுட்ப புத்தாக்கங்களை ஊக்குவித்தல், விவசாயிகளின் மேம்பாட்டிற்கு உதவும் தொடர்புகளை வழங்குதல், வேளாண் வணிகம் செய்வோர் மற்றும் தொழில் வள்ளுநர்களுக்கு உதவுவதே இதன் நோக்கமாகும். இந்த அக்ரி இன்டெக்ஸ் கண்காட்சி, வேளாண் துறை சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சந்தைப்படுத்துதலுக்கான மாபெரும் வாய்ப்பையும் வேளாண் வணிக தொடர்புகளையும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பையும் வழங்குகிறது.

இந்த கண்காட்சியானது சிறு உற்பத்தியாளர்களையும், புத்தாக்கம் செய்வோரையும், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், விற்பனையாளர்கள் மற்றும் சர்வதேச தொழில் பிரமுகர்களை யும் நேரடியாக இணைக்கிறது. இந்தியாவின்மாபெரும்வேளாண் கண்காட்சியான அக்ரி இன்டெக்ஸ் 2026யின் 24ம் பதிப்பு வருகின்ற ஜூலை மாதம் 9 ம் தேதி முதல் 13ம் தேதி வரை கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் நடைபெற உள்ளது. ஜூலை 9ம் தேதி முதல் 13ம் தேதி வரை (A, B, C, D, E, G & H நாற்றுப் பண்ணை மற்றும் விலங்குகளுக்கான வெளிப்புற வளாகம், காட்சி இயந்திரங்களுக்கான வெளிப்புற வளாகம் (B ஹால் முன்பு) ஆகிய வளாகத்தில் நடைபெறுகிறது. என்று தெரிவித்தனர்.

# ஜல்லிக்கட்டு தடையை எதிர்த்து போராடியது போல மேகதாது அணையை எதிர்த்து போராட வேண்டும்

## ஈரோட்டில் அன்புமணி ராமதாஸ் பேச்சு




ஈரோடு ஜூலை 4

பட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் எம் பி கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுவதை தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி விழிப்புணர்வு பயணம் மேற்கொண்டு உள்ளார்.

ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதியில் நடந்த இந்த கூட்டத்திற்கு ஈரோடு மாநகர மாவட்ட பா ம க செயலாளர் எஸ் ஆர் ராஜு தலைமை தாங்கினார். கூட்டத்தில் பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கலந்துகொண்டு பேசியதாவது கர்நாடக அரசு மேகதாது அணைக்கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது இந்த அணை கட்டப்பட்டால் காவிரி டெல்டா பகுதி பாலைவனம் ஆகிவிடும். சாப்பாடு கூட கிடைக்காத நிலைஏற்படும். கர்நாடகாமுதல்அமைச்சர் சிவக்குமார் குடிநீருக்காக மட்டுமே இந்த அணை பயன்படுத்தப்படும் விவசாயத்துக்கு பயன்படுத்தமாட்டோம் என்று சொல்கிறார். இது ஏமாற்று வேலையாகும். இந்த அணை கட்டப்பட்டால் நமக்கு குடிநீர் கூட கிடைக்காத நிலை ஏற்படும். இந்த அணையினால் காவிரி டெல்டா பகுதி மட்டும் அல்லாமல் தமிழ் நாடு முழுவதும் உள்ள பொது மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். எனவே மேகதாது அணை கட்டுவதை உடனடியாக தடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இந்த அணை கட்டப்படுவதினால் வருங்கால சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள். தமிழ்நாடு மிகவும் பாதிக்கும். எனவே இப்போதே இதை தடுக்க வேண்டும். சாதி மதத்துக்கு அப்பாற்பட்டு அரசியலுக்கு அப்பாற்பட்டு வேறுபாடுகளை மறந்து இந்த அணைக்கட்டுவதை அனைவரும் தடுக்க வேண்டும். இது தொடர்பாக கோர்ட்டுகளில் பல்வேறு இடங்களில் இருந்து வழக்கு தொடர வேண்டும். ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்ட போது அதை எதிர்த்து இளைஞர்கள் அனைவரும் போராடி வெற்றி கண்டதை போல மேகதாது அணை கட்டுவதையும் எதிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் மேகதாது அணை கட்டப்படுவதை எதிர்த்து நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் சட்டசபை யில் பேசி உள்ளார். மேகதாது அணையே வேண்டாம் என்று என்று கூறும் போது நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று கூறுவது தேவையில்லாதது இதனால் தீர்வு கிடைக்காது. இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் ஈரோடு மாநகர மாவட்ட நிர்வாகிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட தலைவர் பிரபு நன்றி கூறினார்.



தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கூத்தாப்பாடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையில் உள்ள பயனாளிகளிடம் மருத்துவமனையில் அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டு அறிந்தார். மேலும் பொது மக்களுக்கு அழைக்கப்படும் அனைத்து மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் உடனிருந்தனர்.

## தென்காசி நகராட்சியில்

# நகர்மன்ற உறுப்பினர்கள் தவெக அரசு மற்றும் நகராட்சி அதிகாரிகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி, ஜூலை.4

தென்காசி மாவட்டம் தென்காசி நகராட்சியில் உள்ள 33 வார்டு நகர் மன்ற உறுப்பினர்களில் பாஜக நகர் மன்ற உறுப்பினர்களைத் தவிர மற்ற கட்சிகளை சேர்ந்த நகர்மன்ற உறுப்பினர்கள் தவெக அரசு மற்றும் நகராட்சி அதிகாரிகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தென்காசி நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன 33 வார்டுகளிலும் உள்ள மக்களின் அடிப்படை தேவை பணிகளை நகராட்சி அதிகாரிகள் தடுத்து நிறுத்துகின்றனர் மக்களின் தேவைகளை நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அதிகாரிகளிடம் எடுத்துக்கூறும் போது நகராட்சி அதிகாரிகள் மேலிட உத்தரவு என்று கூறி பணி செய்ய மறுக்கிறார்கள் இது மக்கள் விரோத செயல் என்றும் உள்ளாட்சி சட்டப்படி தன்னாட்சி அதிகாரம் உள்ள மக்கள் அடிப்படைத் தேவையை மன்றத்தின் அனுமதியுடன் நிறைவேற்றி செயல்படுத்த எந்த அரசும், அதிகாரிகளும் தடுக்க முடியாது மீறி மேலிட உத்தரவு என்று கூறி மக்களின் தேவையை தடுத்து நிறுத்தி நிராகரித்தால் மக்கள் நலம் விரும்பும் நகர்மன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் அரசு நிர்வாகம் செயல்பட தேவையானமன்றபொருள்கள் கோப்புகள் மன்ற அனுமதிக்கு வந்தால் அதை நிராகரிப்போம் என்பதை இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் நகர் மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அதிகாரிகளுக்கு தெரிவித்தனர் பாஜக நகர் மன்ற உறுப்பினர்களை தவிர இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மற்ற கட்சிகளை சேர்ந்த அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவெக அரசு மற்றும் நகராட்சி அதிகாரிகளை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர் இறுதியாக பாஜக நகர் மன்ற உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை இந்த ஆர்ப்பாட்டத்தில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்று பத்திரிகை யாளர்களிடம் தெரிவித்தனர்.



## மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம்

மதுரை, ஜூலை 4

எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவர்/ மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA) நடைபெற்றது.

தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை , மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி , மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் .சோ.கார்த்திகேயன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா ,மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன் , மதுரை மத்திய சட்டமன்ற உறுப்பினர் மதார் பதுருதின், உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய், மாநகராட்சி மேயர்(பொ)/துணை மேயர் தி.நாகராஜன் , மாநகர காவல் ஆணையாளர் எஸ். ராஜேந்திரன் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், ஆகியோர் உடன் உள்ளனர்.

# மாத்தூர் தொட்டி பாலம் அருகே வழிபாடு தல பிரச்சனை இந்து முன்னணி போராட்டம்: 37 பேர் கைது

மார்த்தாண்டம்,ஜூலை. 4



மாத்தூர் தொட்டி பாலம் அருகே நீதிமன்ற உத்தரவை மீறி கிறிஸ்தவ வழிபாடு கூடம் செயல்படு வருகிறது. இந்த கிறிஸ்தவ வழிபாடு கூடத்தை சீல் செய்து மூட நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளை கண்டித்து இந்து முன்னணி திருவட்டாறு ஒன்றிய இந்து முன்னணி தலைவர் ஐயப்பன் தலைமையில் நேற்று திருவட்டாறு சந்திப்பு பகுதியில் போராட்டம் நடத்த போவதாக இந்து முன்னணியினர் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் அங்கு குவிந்த இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம் மற்றும் பாஜக மாவட்ட தலைவர் ஆர் டி சுரேஷ் உட்பட்ட பாஜக, இந்து முன்னணி நிர்வாகிகள் மாத்தூர் தொட்டி பாலம் செல்ல நடந்தனர். அப்போது ஏடிஎஸ்பி கலைஅழகன் தலைமையில் போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது ஆர் டி ஓ புஷ்பா தேவி சம்பவ இடத்திற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தபோவதாக போலீசார் தெரிவித்திருந்தனர். ஆர் டி ஓ வுக்காக போராட்டம் நடத்தியவர்கள் காத்து இருந்தனர். ஒரு மணி நேரத்திற்கு மேலாக தாமதமாக வந்த டி ஆர் ஓ போராட்டம் நடத்தியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தாமல், அருகில் ஒரு பேக்கரியில் சென்று போலீசாரிடம் பேசி கொண்டு இருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம் தனது காரை எடுத்து வந்து திருவட்டாறு

மார்த்தாண்டம் சாலையில் நிறுத்தி சாலைமறியல் போராட்டம் நடத்தினர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட இந்து முன்னணி பாஜக நிர்வாகிகளிடம் போலீசார் வாக்குவாதம் செய்தனர். வாக்கு வாதம் தள்ளு முள்ளாக மாறியது. தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குண்டு கட்டாக போலீசார் கைது செய்து சிலரை வாகனத்தில் ஏற்றியும், சிலரை நடத்தியும் மண்டபத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு மண்டபத்திற்கு முன் இந்து முன்னணி கொடியை இந்து முன்னணி நிறுவாகிகள் கட்டினர். அதை போலீசார் அகற்றியதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷங்கள் எழுப்பினர். இந்த போராட்டம் காரணமாக திருவட்டாறு மார்த்தாண்டம் சாலையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. மொத்தம் ஆண்கள் பெண்கள் உட்பட 37 பேர் கைது செய்யப்பட்டனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியோர்களின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருள் வழங்கும் பணி




தஞ்சாவூர் ஜூலை 4

த ஞ் சா வூ ர் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் முதியவர் களின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருள்கள் வழங்கும் பணி 4, 6 தேதிகளில் நடக்கிறது இது குறித்து தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் ரேவதிவெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கு சென்று அரிசி ,சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருள்களை விநியோகம் செய்யும் முதலமைச்சரின் தாயு மானவர் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது

திட்டத்தின் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 1,248 ரேஷன் கடைகளைச் சேர்ந்த 48,817 ரேஷன் கார்டுகளில் உள்ள 75, 706 பயனா ளர்களுக்கு அவர்களின் வீடுகளில் ரேஷன் பொருள்களை விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எனவே 4 ,6 தேதிகளில் சனி, திங்கள்கிழமை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளு க்கு நேரடியாக சென்று குடிமை பொருள்களை விநியோகம் செய்தி ட உத்தரவு இடப்பட்டுள்ளது .அதன் படி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் முதலமைச்சர் தாயுமானவர் திட்டம் மூலம் வீடு தேடி குடிமை பொருட் கள் விநியோகம் செய்யப்பட உள்ளது. மேற்கண்ட 2 நாட்களில் பயனாளிகள் குடிமைப் பொருட்களில் அவர்களின் வீடுகளில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கொங்க வேம்பு கால்நடை மருந்தகத்தை மாவட்ட ஆட்சியர்சரவணன்நேரில்சென்றுதிடீர்ஆய்வுமேற்கொண்டு,அன்றாடகால்நடைகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும், தற்போது நடைபெற்று வரும் கோமாரி நோய் தடுப்பு ஊசி செலுத்தும் பணிகள் குறித்தும், கால்நடை மருத்துவரிடம் கேட்டறிந்து மருந்துகளின் இருப்பு மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவிடுகளை பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் மருத்துவர் தா முருகலட்சுமி, அரூர் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மருத்துவர் கனகசபை உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

## அடையாறு வண்ணாதுரை எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள

# ஸ்ரீதேவி எல்லையம்மன் திருக்கோவில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா

சென்னை, ஜுலை 4



சென்னை, அடையாறு வ ண் ணா து ரை , எல்லையம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி எல்லையம்மன் திருக்கோவில் புனராவர்த்தனஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா க் வெகு சிறப்பாக நடைபெற்றது,

எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீதேவி எல்லம்மன்னுடைய தனிப்பெருங்க ருணையும் இச்சா சக்தி ஞானசக்தி கிரியா சக்தியாகவும் கேட்ட வரங்களைவாரிவழங்குகின்றதாயாகவும் அனைத்து எல்லைகளுக்கு அதிபதியாகவும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகிய ஸ்ரீதேவி எல்லையம்மன் ஆலயம் மிக சிறப்பாக திருப்பணிகள் துவங்கிவர்ணங்கள்பூசப்பட்டுநூதனமாக ஸ்ரீதேவி கோலவிழி யம்மன் மற்றும் ஆலயத்தில் எழுந்திருக்கும் அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் அனைத்து கோபுரங்களும் புனரமைக்கப்பட்டு நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆனி மாதம் திருதீயைதிதி திருவோணம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் கன்னியா லக்னத்தில் அன்னை ஸ்ரீதேவி எல்லையம்மன் மற்றும் ஸ்ரீதேவி கோலவிழியம்மன் விநாயகர் மற்றும் அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் ஆன்மீக பக்தர்கள் பகுதி பொதுமக்கள் முன்னிலையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, ஆலயத் தலைவர் பன்னீர்செல்வம், செயலாளர் வெங்கடாசலம், பொருளாலர் அங்கமுத்து, மற்றும் ஆலைய விழாக்குழுவினர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

# ரூ.5000 லஞ்சம் வாங்கிய மாநகராட்சி பில் கலெக்டர் கைது



திருச்சி, ஜூலை 4

திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்ட அலுவலகத்தில் பில் கலெக்டராக பணியாற்றி வருபவர் ராமமூர்த்தி. இவரிடம் திருச்சி பொன்மலை பகுதியைச் சேர்ந்த சக்தி கணபதி தங்களின் அப்பார்ட்மெண்ட் சொத்து வரி மற்றும் பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக அணுகினார்.

அப்போதுபில்கலெக்டர் ராமமூர்த்தி அவரிடம் ரூ.5000 லஞ்சம் கேட்டார். இதனைக் கொடுக்க விரும்பாத சக்தி கணபதி இதுகுறித்து திருச்சி மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் தெரிவித்தார். அதன் பேரில், லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்கு பதிவு செய்து இன்று பொறிவைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதற்காக ரசாயனம் தடவிய ரூபாய் ஐந்தாயிரம் பணத்தை சக்தி கணபதியிடம் கொடுத்து அனுப்பினர். பின்னர் அதனை சக்தி கணபதி, பொன்மலை கோட்ட அலுவலகத்தில் பில் கலெக்டர் ராமமூர்த்தியிடம் கொடுத்த போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு துறையினர் அவரை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். திருச்சி மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை காவல் ஆய்வாளர் சக்திவேல் தலைமையிலான போலீசார் இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் பொன்மலை கோட்ட அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.

## குமாரகோவிலில்

# யுவ ஆப்த மித்ரா திட்ட பயிற்சி முகாம் மாவட்ட கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூலை. 4

குமரி மாவட்ட வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் இளம் பேரிடர் நண்பர் தன்னார்வலர்களுக்கான பயிற்சி முகாம் குமாரகோவில் நூருல் இஸ்லாம் உயர் கல்வி மைய கலையரங்கில் நேற்று நடைபெற்றது.

இம்முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பேசியதாவது:

தமிழக அரசின் வழிகாட்டுதலின் படி, பேரிடர் மேலாண்மை மற்றும் அவசரகால மீட்புப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்தும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் "யுவ ஆப்தமித்ரா" பயிற்சி முகாம் நடைபெற்றது. மாவட்டத்தில் உள்ள தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தன்னார்வ அமைப்புகளைச் சேர்ந்த இளம் தன்னார்வலர்கள் ஏராளமானோர் இப்பயிற்சியில் கலந்துகொண்டுள்ளீர்கள். மழைக்காலங்களில் பேரிழப்புகள் ஏற்படுகின்றன. இவற்றை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக வெள்ளம், கடல்சீற்றம், புயல், தீ விபத்து போன்ற இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரிடர்களின் போது, அதிகாரப்பூர்வ மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வரும் முன்னரே, உள்ளூர் மட்டத்திலிருக்கும் இளைஞர்கள் முதல் கட்ட மீட்புப் பணிகளைஎவ்வாறுதுரிதமாகச்செய்ய வேண்டும் என்பதற்கான செயல்முறைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி முகாமானது இன்றிலிருந்து மூன்றுநாட்கள் வரை நடைபெறும். எனவே அனைத்து தன்னார்வலர்களும் இப்பயிற்சி முகாமினை நன்கு பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். பேரிடர் காலங்களில் தாழ்வான பகுதிகளை கண்டறிந்து முன்னேச்சரி க்கை நடவடிக்கை வேண்டும். என கூறினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் அ. பூங்கோதை, உதவி ஆட்சியர் பயிற்சி மோனிகா, நூருல் இஸ்லாம் உயர் கல்வி மைய பேரிடர் மேலாண்மை துணை வேந்தர் முனைவர் ஜெசி தாமஸ், இணை துணை வேந்தர் ஜனார்த்தன், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், கல்லூரி மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரியாக க. செல்லத்துரை, எம்.ஏ. பி. எல்., பதவியேற்றுக் கொண்டார்கள்.




## தூத்துக்குடி

# அனைத்து மகளிர் காவல் நிலைய போக்சோ வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளிக்கு சிறை தண்டனை

தூத்துக்குடி, ஜூலை 4

தூத்துக்குடி அனைத்து மகளிர்காவல் நிலைய போக்சோ வழக்கில் சம்மந்தப்பட்ட குற்றவாளிக்கு சிறை தண்டனை மற்றும் அபராதம் பெற்று தந்த அப்போதைய விசாரணை அதிகாரி அம்பாசமுத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் வனிதா மற்றும் தூத்துக்குடி அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் சமுத்திரகனி ஆகியோரையும், சிப்காட் காவல் நிலைய கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு நீதிமன்றத்தில் சிறை தண்டனை மற்றும் அபராதம் பெற்றுத் தந்த முறப்பநாடு காவல் நிலைய ஆய்வாளர் ஹரிஹரன் மற்றும் நீதிமன்ற தலைமை காவலர்கள் சிவனேசமாணிக்கம் மற்றும் இளையராஜா ஆகியோரையும் திருநெல்வேலி சரக அலுவலகத்திற்கு வரவழைத்து முனைவர் இரா. திருநாவுக்கரசு காவல்துறை துணைத் தலைவர் அவர்கள் நேற்று நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.



ஈரோடு மாவட்டம் பவானி ஜம்பை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சலுகைகள் தொடர்பான புகைப்பட கண்காட்சி வைக்கப்பட்டு உள்ளது. இதை பொது மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.